## 29.20 மக்கள் நலப்பணியாளர்களின் இடமாற்றம் குறித்த வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.49 நாள் : 19.03.1999

படிக்க :

ஒருங்கிணைப்பாளர், முதலமைச்சர் அலுவலகம், அவர்களது 21.02.1999 தேதியிட்ட குறிப்பு

**ஆணை**

மக்கள் நலப் பணியாளர்கள் இடம் மாறுதல் குறித்து மாநில அளவில் வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடுவது குறித்து அரசு கவனமாக ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கிறது.

2. மக்கள் நலப் பணியாளர்கள் தங்களது சொந்த ஊராட்சிக்கோ அல்லது அருகாமையில் உள்ள இடங்களுக்கோ மாறுதல் கோரி விண்ணப்பிக்கும் போது பின்வரும் அடிப்படையில் இக்கோரிக்கைகளை செயல்படுத்தலாம்.

அ. ஒரு வட்டாரத்திற்கு உள்ளேயே மாறுதல் கேட்கப்பட்டால் அதை சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்களே செயல்படுத்தலாம்.

ஆ. ஒரு வட்டாரத்திலிருந்து இன்னொரு வட்டாரத்திற்கு ஒரு மாவட்டத்திற்கு உள்ளேயே மாறுதல் கேட்கப்பட்டால் அதை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரே செயல்படுத்தலாம்.

இ. ஒரு மாவட்டத்திலிருந்து மக்கள் நலப் பணியாளர், வேறொரு மாவட்டத்திற்கு மாறுதல் கேட்டால் எந்த மாவட்டத்திலிருந்து மாறுதல் கேட்கப்படுகிறதோ அந்த மாவட்ட ஆட்சித் தலைவரும், மாறுதல் கோரும் மாவட்டத்தின் மாவட்ட ஆட்சித் தலைவரும் ஏற்றுக் கொண்டால் இந்த மாறுதல் செயல்படுத்தப்படலாம்.

இந்த மாறுதல் மாறுதல் கேட்கப்படும் கிராம பஞ்சாயத்தில் காலியிடம் இருத்தல் அல்லது மனம் ஒத்த அடிப்படையில் மாறுதல் கேட்கப்படுதல் என்ற நிபந்தனைக்குட்பட்டு செயல்படுத்தப்படும்.

மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது வட்டார வளர்ச்சி அலுவலர்களோ காலியிடம் இருக்குமானால் மாற்றல் ஆணை பிறப்பிக்கலாம்.

இந்த மாறுதல் ஆணைகளின் நகல் ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும்.

3. முன்பத்தி இரண்டிலுள்ள ஆணையை தவறாது பின்பற்றுமாறு வட்டார வளர்ச்சி அலுவலர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்